காம்கேர் கே.புவனேஸ்வரி

# ‘விரல் நுனியில் உன் உலகம்!’

டெக் தொடர் 6



### யு-டியூப் வீடியோக்களும், ஆடியோ பாட்காஸ்டிங்கும்!

லேப்டாப் மற்றும் கம்ப்யூட்டரில் பார்வையிட வெப்சைட்டுகளும், ஸ்மார்ட் போனில் பார்வையிட ஆப்களும் பயன்படுகின்றன என்பதைத் தெரிந்துகொண்டோம்.

முப்பது வருடங்களுக்கு முன்பெல்லாம் வெளியுலகத் தொடர்புகளைப் பெறுவதற்கு செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், வானொலியும் மட்டுமே பெரும்பாலும் உதவின. அதன் பின்னர் மெதுமெதுவாக ஒவ்வொரு வீட்டிலும் தொலைக்காட்சி பெட்டிகள் இடம்பெற்று தொலைக்காட்சி சேனல்கள் பெருகின.

அவ்வப்பொழுது நமது நினைவுகளை சேகரிக்க புகைப்பட கேமிராக்களும், வீடியோ கேமிராக்களும் கைகொடுத்தன. தேவைப்பட்டால் ஸ்டூடியோக்களில் சொல்லி அவர்களை விட்டு புகைப்படம், வீடியோக்களைப் பதிவாக்கி வைத்துக் கொண்டோம்.

1990களில் கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் மெல்ல அடி எடுத்து வைத்தது. 1996க்குப் பிறகு இண்டர்நெட், கம்ப்யூட்டருடன் இணைய ஆரம்பித்து, இணையப் பெருவெளியை ஆக்கிரமித்துக் கொண்டு, வெர்ச்சுவல் உலகத்தை உருவாக்கி அழகு பார்த்து வருகிறது.

இன்று பத்திரிகை, செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, கேமிரா, காலண்டர், கடிகாரம், கம்ப்யூட்டர், இண்டர்நெட் என அத்தனையையும் தன்னுடன் அடக்கியாண்டு வருகின்றன ஸ்மார்ட் போன்கள்.

A7 ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேற்றம் (Britain, Exit)

Q8 **கேசாவரம் எனும் சிற்றூரில் கல்லாறின் கிளையாறாக உருவாகிப் பாயும் நதி எது?**

தகவல்களை எழுத்து வடிவில், ஒலி வடிவில், ஒலி ஒளி வடிவில் பெறுவதற்கு உதவுவதற்கு ஏராளமான சாஃப்ட்வேர்களும், ஆப்களும், டூல்களும் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றில் இருந்து சரியானதைத் தேர்வு செய்யத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை.

இணையத்தை தன் உள்ளங்கைக்குள் அடக்கி விரல் நுனியில் ஆட்டிப் படைக்க உதவுவது மொபைல் ஆப்கள். இணையத்தை டேபிள் மீதும் (டெஸ்க்டாப்), மடி மீதும் (லேப்டாப்) வைத்துக்கொண்டு இயக்கி ஆள உதவுவது வெப்சைட்டுகள்.

தகவல்களை எழுத்து வடிவில் வாசிப்பதற்கு வெப்சைட்டுகளில் ஏராளமான பத்திரிகைகளும், செய்தித்தாள்களும் குவிந்து கிடக்கின்றன. தவிர ஃபேஸ்புக், டிவிட்டர், வாட்ஸ் அப் என சமூக வலை தளங்களிலும் பகிரப்பட்டு வருகின்றன. தகவல்களை ஆடியோ வடிவில் பெறுவதற்கு https://anchor.fm/>, <https://soundcloud.com/। போன்ற வெப்சைட்டுகளும், மொபைல் ஆப்களும் உள்ளன.



**ஆடியோ வடிவில் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு, 'ஆடியோ பாட்காஸ்ட்டிங்' என்று பெயர்.**

**தகவல்களை வீடியோ வடிவில் பெறுவதற்கு உதவும் யுடியூப்** (https://youtube.com) **மிகப் பிரபலம் இன்று.**

**A8** கூவம்

**Q9 இந்தியாவிலேயே எந்த நகரின் சாலைகளில் முதன்முதலாக தெரு விளக்குகள் போடப்பட்டன?**

1990களில் கம்ப்யூட்டர் என்பது படித்துப் பட்டம் பெற்றவர்களுக் கானது, ஆங்கிலம் அறிந்தவர் களுக்கானது, இளைஞர்களுக் கானது, பணக்காரர்களுக்கானது என்றெல்லாம் நினைத்து மிரண்ட நம் மக்கள், இன்று தொழில் நுட் பத்தை உள்ளங்கைக்குள் அடக்கி, விரல் நுனியால் தட்டி ஜமாய்த்து வருகிறார்கள். மிக அழகான ஏறுமுகமான வளர்ச்சி இது. இன்று



அதிகம் படிக்காதவர்களும், வய தில் பெரியவர்களும், ஆங்கிலம் அறியாதவர்களும், அன்றாடம் உழைத்துச் சாப்பிடும் பொருளாதாரத்தில் பின் தங்கிய வர்களும்கூட கையில் இணைய இணைப்புடன் கூடிய ஸ்மார்ட் ஃபோன்களை வைத்திருக்கிறார் கள். எத்தனை பெருமிதமான வளர்ச்சி இது.

கம்ப்யூட்டரில் வெப்சைட்டு களிலும், ஸ்மார்ட் போன்களில் ஆப்களிலும் தகவல்களை வாசித்து வந்த நம் மக்களில் பலரும் இன்று தங்களுக்கான ப்ளாக், வெப்சைட் என உருவாக்கி தாங்களும் தகவல்களை பகிரத் தொடங்கி உள்ளனர்.

ஆடியோ பாட்காஸ்ட்டிங் சாஃப்ட்வேர்கள் / ஆப்கள் மூலம் ஆடியோவை கேட்டுக்கொண்டி ருந்த பலரும் தாங்களாகவே ஆடியோ பாட்காஸ்ட்டிங் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

யுடியூபில் மற்றவர் களின் வீடியோவை பார்த்து ரசித்து வந்த பலரும் தங்களுக்கென பிரத்யேக மாக யுடியூப் சேனல்களை உருவாக்கிக் கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவது டன் அதன் மூலம் சம்பாதிக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

புகைப்படப் பிரியர்கள் பலரும் இன்ஸ்டாகிராமில் தங்கள் திறமை களைக் கொட்டி ஆர்ப்பரித்து மகிழ்ந்து வருகிறார்கள்.

இப்படி, மனிதர்கள் வெர்ச்சுவல் உலகில் தனித்துவத்துடன்

**Q10**

**A9** பெங்களூர்

**பிரபல சிற்பங்களைக் கொண்ட கஜுராஹோ எந்த மாநிலத்தில் உள்ளது?**

இயங்குவதற்கு ஏராளமான வாய்ப்புகள் எங்கும் கொட்டிக் கிடக்கின்றன. அதைப் பயன்படுத்தும் சூட்சுமத்தை அறிய வேண்டியது மட்டுமே நாம் எடுக்கும் முயற்சியாகும்.

**அந்த சூட்சுமத்தை அறிந்து கொண்டால் வீட்டில் இருந்தபடி ஜமாய்க்கலாம்.**

நாம் வாழும் இந்த உலகத்தைப் போலவே இணையத்தில் உலா வரும் மற்றொரு உலகமே வெர்ச்சுவல். இதில் நாம் ஒவ்வொருவரும் பயணப்படவும் அந்தப் பயணம் இனிமையானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமையப்பெற சிற்சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் போதும். உல்லாசமாக உலா வரலாம்.

குறிப்பாக, நாம் பயன்படுத்தும் லேப்டாப் மற்றும் ஸ்மார்ட் போன்கள் வைரஸ் பாதிக்காமல் இருக்க ஆன்டி வைரஸ் சாஃப்ட்வேர் வாங்கி இன்ஸ்டால் செய்து கொள்ளலாம். இப்போதெல்லாம் ஒரு ஆன்டி வைரஸ் பேக்கேஜ் வாங்கினால் அதை ஒரு லேப்டாப், ஒரு டெஸ்க்டாப், ஒரு ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன் என மூன்றிலும் இன்ஸ்டால் செய்து கொள்ளும்படி கொடுக்கிறார்கள்.

அடுத்து, சமூக வலைதளங்களில் புகைப்படங்கள் மற்றும் நம்மைப் பற்றியும் நம் குடும்பத்தைப் பற்றியுமான பர்சனல் தகவல்களைப் வெளிப்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் பிறந்த தேதி, தொலைபேசி எண் இவற்றை எல்லாம் பப்ளிக் செட்டிங்கில் வெளிப்படுத்தாமல் Only Me செட்டிங்கில் பொருத்திக் கொள்ளுங்கள்.

#single_challenge, #Couple_Challenge என்பதுபோன்ற பொதுவான ட்ரெண்ட்டிங்குகளில் கலந்துகொள்வதைத் தவிர்க்கவும். இந்த ஹேஷ் டேகுகளைப் பயன்படுத்தி உங்கள் குடும்பப் புகைப்படங்களை பகிர்வது மிக ஆபத்தானது. முன்பெல்லாம் பொது இடங்களில், 'சத்தமாக பேசாதீர்

A10 மத்தியப் பிரதேசம்

**Q11 பில் கேட்ஸும் அவரது மனைவியும் விவாகரத்து செய்யவிருக்கிறார்கள். அவரது மனைவியின் பெயர் என்ன?**

**ந**ம் கல்கி குழும வெப்சைட்டில் (kalkionline.com) தகவல்கள் கட்டுரை வடிவிலும், ஆடியோ வடிவிலும், வீடியோ வடிவிலும் கொட்டிக்கிடக்கின்றன.

அவை அனைத்துமே லேப்டாப், ஸ்மார்ட் போன், ஐபேடு, டேப்லெட் என அனைத்து சாதனங்களிலும் உங்களுக்குக் கிடைக்கும்.

தவிர, கல்கி, மங்கையர்மலர் மற்றும் கோகுலம் இதழ்களின் பல வருட புத்தகங்கள் எல்லாம் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. பல வருட தீபாவளி மலர்களும் உள்ளன.

மேலும், ஏராளமான மின்னூல்களையும் காணலாம். புரட்டிப் படிக்கலாம்.

அமரர் கல்கி அவர்களின் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், அலை ஓசை, பார்த்திபன் கனவு என அனைத்தையும் அந்தந்த காலகட்ட கல்கி இதழின் பக்கங்களுடன் அதற்கு ஓவியம் வரைந்த ஓவியர்களின் ஓவியங்களுடன் அந்தக் கால கட்டத்துக்கே அழைத்துச் சென்றதைப் போல உங்கள் அனைவரையும் உணர வைக்கும் அரிய தொகுப்பாக, பொக்கிஷமாக சேகரித்து வைத்துள்ளார்கள்.

மேலும், கல்கி மற்றும் மங்கையர்மலர் இதழ்களையும் Flip Book வடிவில் அச்சுப் புத்தகங்களை வாசிக்கும் அதே நுணுக்கத்தில் வாசிக்கும் வகையில் வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

**அத்தனையும் தற்போது கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக!**

மிஸ் பண்ணிடாதீங்க... இவற்றை நீங்கள் பயன்படுத்துவதுடன் அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்செல்ல வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையும் ஆகும்.

வாழ்த்துக்கள்! கல்கி குழுமத்துடன் இணைந்திருங்கள்.

Website :

https://www.kalkionline.com/default.php

Facebook :

https://www.facebook.com/KalkiOnline/

https://www.facebook.com/Kalkimagazine

https://www.facebook.com/mangayarmalar39/

Twitter :

https://twitter.com/KalkiOnline

Instagram :

https://www.instagram.com/kalkionlineinsta

Youtube :

https://www.youtube.com/c/kalkionline2

கள்' என நம் வீட்டுப் பெரியவர்கள் அறிவுரை சொல்லி வழிநடத்தினார்கள். இன்று உலகத்துக்கே தெரிவதைப் போல நம் பர்சனல் விஷயங்கள் அத்தனையையும் கொட்டித் தீர்க்கிறோம் பொது வெளியில்.

எதை எல்லாம் இணையப் பொதுவெளியில் வெளிப்படுத்தலாம், வெளிப்படுத்தக் கூடாது என்பதில் கவனமாக இருந்தால் இணையவெளிப் பயணம் பாதுகாப்பாக, இனிமையாக அமையும். **(நிறைவுற்றது)**